සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூகவலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND

දිවිනැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
வாழ்வின்எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
Department of Divineguma Development

1වනඅධියර,4වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල.
1ம் கட்டம், 4வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல
1st4 th floor, Sethsiripaya ,Battaramulla

මගේ අංකය
எனதுஇல
My No } DDD/HO/ME/08/.........

ඔබේ අංකය
உமதுஇல
Your No } ...............................

දිනය
திகதி
Date } 2016.12.31

**வாழ்வின் எழுச்சி வங்கிச் சுற்று நிருப இலக்கம் 2016/12**

சகல வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்,

சகல மாவட்ட வங்கி விடய / கண்காணிப்பு முகாமையளார்களுக்கும்.

## வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளை தரப்படுத்தலும் மற்றும் மதிப்பீடு செய்தலும்.

### 1. அறிமுகம் :-

இலங்கை மக்கள் சமூகத்தின் மத்தியில் வறுமையினை ஒழிக்கும் பொருட்டு முப்பரிமாண அபிவிருத்தி அணுகுமுறையினூடாக (நலனுதவி, கிராமிய அபிவிருத்தி, நேரடியான / வங்கி) நடைமுறைப்படுத்தப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பிரதானமான அணுகுமுறையாக சமுர்த்தி வங்கி வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. குறைந்த வருமானம் பெறுவோருக்கு மூலதன சக்தியை வழங்குவதை பிரதான நோக்காகக் கொண்ட இவ்வங்கி வலையமைப்பிற்கு அண்ணளவாக 20 ஆண்டுகள் பூர்த்தியாகி உள்ளது.

தற்போது நாடுமுழுவதும் 1074 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளும், 331 சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களும் (மகா சங்கங்கள்) செயற்பாட்டில் உள்ளன. 2013 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் பிரகாரம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் தாபிக்கப்பட்டு அடுத்த தசாப்தத்திற்கான அடியெடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வங்கி வலையமைப்பினுள் காணப்படும் பெருமளவிலான மனிதவளம், பௌதீகவளம். மூலதனவளம் என்பன வாழ்வின் எழுச்சி தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் செயற்பாடுகளுடன் பின்னிப் பிணைந்துள்ளது. இக் குறுநிதி வங்கி வலையமைப்பானது அண்ணளவாக கடந்த 06 வருடகாலமாக மதிப்பீடு மற்றும் பின்னூட்டல் செயற்பாடுகளுக்கு உட்படாமையினால் வங்கிகளை இலாபகரமான நிலைமைக்கு கொண்டுவருவது தற்போது பாரிய சவாலாக உள்ளது.

பொது மக்களின் பணத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய இவ்வாறான நிதி நிறுவனங்கள் நல்லாட்சிக் கொள்கைகளை (GOOD GOVERNANCE PRINCIPLE) மிகச் சிறப்பான முறையில் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். இவ் வங்கி வலையமைப்பினது நிதிச் செயற்பாடுகளை வினைத்திறன் மற்றும் செயற்திறன் மிக்க வகையில் செயற்படுத்திச் செல்ல இவ் வங்கிகளுக்கான தரப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் முறையினை மிகவிரைவாக நடைமுறைப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

இதன் பிரகாரம் மதிப்பீட்டுச் செயற்பாட்டுக்கும் மற்றும் தரப்படுத்தல் நடவடிக்கைகளுக்கும் பொருத்தமான முறைமையும் அதற்கான நியதிகளையும் அடிப்படைகளையும் இதன் மூலம் அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

KUGAN/D

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂජනරාල් / மேலதிகபணிப்பாளர்தலைமையதிபதி / Additional DirectorGeneral | අධ්‍යක්ෂ )පාලන( / பணிப்பாளர்(நிர்வாகம்) / Director (Administration) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|
| Tel- | 011-2873802/2872202 | 011-2871672 | 011-2873799 | 011-2887280 |
| Fax - | 011-2889002 | 011-2887280 | 011-2873996 | **011- 2887722**(Hotline) |
| E-mail- | dg@divineguma.gov.lk | adg@divineguma.gov.lk | diradmin@divineguma.gov.lk | |

1.1 **நோக்கம்:-**

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் ஒன்றிணைந்த நல்லாட்சிக்கான கொள்கைகளை (CO-OPERATIVE GOOD GOVERNANCE PRINCIPLE) பின்பற்றி தமது பங்காளர்கள், வைப்பாளர்கள் மற்றும் வங்கியின் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் வினைத்திறன் மற்றும் செயற்திறன் மிக்க சேவையினை வழங்குதல்.

1.2 **குறிக்கோள்:-**

**I.** வங்கிப் பணிக்குழுவினரை ஊக்குவித்தல்.

**II.** தேசியரீதியாக குறுநிதித் துறையில் முதல்தரமான செயற்பாடுள்ள நுண்நிதி வங்கியாக வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியினை உருவாக்குதல்.

**III.** வங்கிகளுக்கிடையே போட்டித் தன்மையினை உருவாக்குவதன் மூலம் கூடிய செயற்திறன் மற்றும் வினைத்திறன் மிக்க சேவையினை தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல்.

**IV.** ஒவ்வொரு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியினதும் நிதிச் செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல்.

**V.** சகல வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளையும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிதி நிறுவனமாக ஆக்குதல்.

1.3 **செயற்படுத்துகின்ற முறைமை :-**

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவின் முகாமைத்துவ தகவல்கள் அலகினால் அறிமுகப்படுத்துகின்ற நியதிகளின் பிரகாரம் ஒவ்வொரு விடயத்துக்கும் பெற்றுக் கொள்கின்ற புள்ளிகளை அடிப்படையாக வைத்து வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் தரப்படுத்தலுக்கும் மற்றும் மதிப்பீடுக்கும் உட்படுத்தப்படவுள்ளது.

## 2.0 நியதிகளை அறிமுகம் செய்தல் :-

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் ஒரு நிதி நிறுவனமாக உள்ளதுடன் அது வங்கியாகவும் செயற்படுகின்றது. இது ஒரு வணிக வங்கியாக இல்லாவிட்டாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு குறுநிதி நிறுவனமாகும். தற்போது பெருந்தொகையான குறுநிதி நிறுவனங்கள் இலங்கையில் செயற்பட்டுக் கொண்டிருப்பதுடன் அவற்றில் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளை விசேட தன்மைக்கொண்ட குறுநிதி நிறுவனமாக அடையாளப்படுத்துவது பொருத்தமானதாகும். இலங்கையின் வறுமை ஒழிப்பு வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக ஆரம்பிக்கப்பட்டு குறைந்த வருமானம் பெறும் மக்களின் மூலதன சக்திக்கு பங்களிப்புச் செய்கின்ற அரச அனுசரணை கொண்ட குறுநிதி நிறுவனமாக வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் காணப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் மூலம் இன் நிறுவனத்தின் தற்போதைய செயற்பாடுகள் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளின் தரப்படுத்தலுக்காக அறிமுகப்படுத்தப்படுகின்ற நியதிகள் இவ்வங்கிகளின் நோக்கத்தினை அடைந்து கொள்ளக் கூடிய விதத்திலான பொருத்தப்பாடுகளுடன் அமையப்பெற்றுள்ளது.

2.1. **வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளை மதிப்பீடு செய்வதற்கும் தரப்படுத்துவதற்குமான நியதிகள்.**

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் தரப்படுத்தப்படும் போது பின்வரும் **05** விடயங்களில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

1. வைப்புகள்
2. கடன்கள்
3. இடர் முகாமைத்துவம்
4. இலாபத் தன்மை
5. வங்கியின் சுற்றாடல்

ஒரு வங்கி உயர்ந்தபட்சம் **100** புள்ளிகளை பெற்றுக் கொள்ளமுடியும். மேற்படி விடயங்களின் முக்கியத்துவத்திற்கு அமைய பெறுமதி வாய்ந்த புள்ளிகள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு விடயத்துக்கும் வழங்கப்படவுள்ள புள்ளிகளின் அளவு கீழ்வருமாறு அமையவுள்ளது.

**1. வைப்புகள்– மொத்த புள்ளிகள் - 30**

**I.** நீண்டகால வைப்புகள் (சிறுவர், சிசுரக்க) - 10 புள்ளிகள்
**II.** சாதாரண வைப்புகள் (அங்கத்தவர், அங்கத்தவர் அல்லாதோர், திரியமாதா) - 10 புள்ளிகள்
**III.** உயிரோட்டமுள்ள வைப்புகள் (குழுவைப்பு) - 05 புள்ளிகள்
**IV.** பங்கு மூலதனம் - 05 புள்ளிகள்

**2. கடன்கள் - மொத்த புள்ளிகள் - 20**

**I.** வெளியில் உள்ள அறவிட வேண்டிய கடன் தொகை - 10 புள்ளிகள்
**II.** வழங்கப்பட்ட கடன் தொகையின் (பெறுமதியின்) அதிகரிப்பு - 03 புள்ளிகள்
**III.** வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு - 02 புள்ளிகள்
**IV.** கடனாளிகளின் வீதம் - 03 புள்ளிகள்
**V.** வைப்புகளுக்கான கடன் வீதம் - 02 புள்ளிகள்

**3. இடர் முகாமைத்துவம் – மொத்த புள்ளிகள் - 20**

**I. கடன் இடர்களை முகாமை செய்தல் - 07 புள்ளிகள் இதில்**

- காலங்கடந்தகடன் வீதம் - 02 புள்ளிகள்
- அறவிடமுடியாகடன் வீதம் - 02 புள்ளிகள்
- அறவிடமுடியாகடன் ஒதுக்கம் செய்யப்படாமை - (-) புள்ளிகள்
- தொடர்புபட்ட குழுவினருக்கு கடன் வழங்கல் - (-) புள்ளிகள்
- அறவிடமுடியாக் கடன் மீள் அறவீடு - 03 புள்ளிகள்

**II. திரவத்தன்மை இடர்களை முகாமை செய்தல் - மொத்த புள்ளி – 01**

- திரவத்தன்மை வீதம் - 01 புள்ளி

**III. செயற்பாட்டு இடர்களை முகாமை செய்தல் - மொத்தப் புள்ளிகள் - 12**

- நன்மதிப்பு (Good will) - 05 புள்ளிகள்
- கோவைகள் - 04 புள்ளிகள்
- தகவல்களை முகாமைசெய்தல் - 03 புள்ளிகள்

**4. இலாபகரமான நிலமை – மொத்த புள்ளிகள் - 15**

I. காலத்தினுள் உழைத்த இலாபம் - 07 புள்ளிகள்
II. வருமானத்தினுள் கடன் வட்டி வருமானம் - 07 புள்ளிகள்
III. சொத்துக்களுக்கான இலாப வீதம் (AROA) - 01 புள்ளிகள்

5. வங்கிச் சுற்றாடல் - மொத்தப்புள்ளிகள் – 15

- சுற்றுநிருப ஆலோசனைகளுக்கு அமைவாக தயாரிக்கபட்ட பெயரப்பலகை காட்சிப்படுத்தல்
  - 02 புள்ளிகள்
- பாதுகாப்பு விதிமுறைகள் (மதில், வேலி, நிரந்தர பாதுகாப்பு கொண்ட கட்டிடமாக இருத்தல்)
  - 02 புள்ளிகள்
- அடிப்படை பௌதிக வளங்கள் பெற்றிருத்தல் (FAX, PHOTO COPY, PHONE, FURNITURES, ETC…)
  - 02 புள்ளிகள்
- உள்ளகச் செயற்பாடுகள் பூரணத்துவமாக இருத்தல் (5-S எண்ணக்கருவிற்கு அமைய )
  - 03 புள்ளிகள்
- கவர்ச்சிகரமான வங்கிச் சுற்றாடல் (வெளிச் சுற்றுவட்டாரம், உள்ளகம்)
  - 05 புள்ளிகள்
- வாடிக்கையாளர்கள் மற்றும் சமுதாய தலைவர்களுக்கு தேவையான இடவசதிகள்
  - 01 புள்ளி

**வைப்புகளுக்கு :– மொத்த புள்ளிகள் - 30**

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியில் தற்போது செயற்பாட்டில் உள்ள கட்டாய சேமிப்பு தவிர ஏனைய சுயாதீனமான சேமிப்புக்கள் அனைத்தும் இதன் போது கவனத்தில் கொள்ளப்படும். இங்கு கணக்குகளின் எண்ணிக்கைகள் கணிப்பிடும் போது **செயற்படாத கணக்குகளின் தொகை** கணிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்படாது. ஆனால் உரிய **வைப்புகளின் பெறுமதி** மொத்த வைப்புக் கணிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்படும்.

**I. நீண்டகால வைப்பு (சிறுவர், சிசுரக்க) – மொத்த புள்ளி 10**

தொடர்ச்சியான கொடுக்கல் வாங்கல் செயற்பாட்டில் நீண்டகாலத்திற்கு பணம் மீளெடுக்கப்படாத வைப்பு வகைகள் இரண்டாகும்.

| |
|---|
| மொத்தமாக சேகரித்துள்ள நீண்டகால வைப்புத் தொகை 01 மில்லியன் ரூபா அல்லது அதற்கு குறைவாயின் 0.5 புள்ளியும் அதைவிட அதிகரிக்கின்ற ஒவ்வொரு மில்லியன் ரூபாவும் 0.5 புள்ளி விகிதம் கூடியது - 06 புள்ளிகள் $$\frac{\text{மொத்த நீண்டகால வைப்புத் தொகை}}{\text{01 மில்லியன் ரூபா}}$$ |
| காலத்துக்குள்ளான வைப்புத் தொகையின் அதிகரிப்பு வீதம் ஒவ்வொரு 10 % க்கும் 0.5 புள்ளிகள் வீதம் கூடியது - 02 புள்ளிகள். $$\text{வைப்புத் தொகையின் அதிகரிப்பு} = \frac{(\text{2016 இல் மொத்த வைப்பு} - \text{2015 மொத்த வைப்பு})\times 100}{\text{2015 மொத்த வைப்பு}}$$ |
| காலத்துக்குள்ளான கணக்குகளின் எண்ணிக்கைளில் ஏற்படுகின்ற அதிகரிப்பு ஒவ்வொரு 3.5% க்கும் 0.5 புள்ளி வீதம் கூடியது - 02 புள்ளிகள் $$\text{வைப்புக் கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு} = \frac{(\text{2016 இல் மொத்தக் கணக்குகளின் எண்ணிக்கை} - \text{2015 இல் மொத்த கணக்குகளின் எண்ணிக்கை})\times 100}{\text{2015 இல் மொத்த கணக்குகள்}}$$ |

**II. சாதாரண வைப்புகள் (அங்கத்தவர், அங்கத்தவர் அல்லாதோர், திரியமாதா) – மொத்த புள்ளிகள் - 10**

இதுவரை சேகரித்துள்ள சாதாரண வைப்புகளின் ஒவ்வொரு 05 மில்லியன் ரூபாவுக்கும் 0.5 புள்ளிகள் வீதம் கூடியது 06 புள்ளிகள்

$$\frac{\text{மொத்த சாதாரண வைப்புகளின் தொகை (ரூ.)}}{\text{05 மில்லியன் (ரூபா)}}$$

காலத்துக்குள்ளான வைப்புத் தொகையின் அதிகரிப்பு = (2016 இன் மொத்த வைப்புத்தொகை –

$$\frac{\text{2015 இன் மொத்தவைப்புத் தொகை)}}{\text{2015 இன் மொத்த வைப்பு}}\times 100$$

இதன் ஒவ்வொரு 10 % அதிகரிப்புக்கும் 0.5 புள்ளிவீதம்கூடியது 02 புள்ளிகள்

கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு = (2016 இல் மொத்த கணக்குகளின் எண்ணிக்கை

$$\frac{\text{2015 இல் கணக்குகளின் எண்ணிக்கை)}}{\text{2015 இல் மொத்த கணக்குகள்}}\ \text{x}100$$

காலத்துக்குள்ளான கணக்குகளின் எண்ணிக்கையின் ஒவ்வொரு 3.5 % அதிகரிப்புக்கும் 0.5 புள்ளிவீதம் கூடியது 02 புள்ளிகள்

**III. உயிரோட்டமுள்ள வைப்புகள் (குழுவைப்பு) மொத்த புள்ளிகள் - 05**

இதுவரை சேகரித்துள்ள குழுவைப்புத் தொகையின் ஒவ்வொரு 03 மில்லியன் ரூபாவுக்கும் 0.25 புள்ளிவீதம் கூடியது 03 புள்ளிகள்

$$\frac{\text{மொத்த குழுவைப்பு}}{\text{3 மில்லியன் ரூபா}}$$

காலத்துக்குள்ளான வைப்புத் தொகையின் அதிகரிப்பு = (2016 இல் மொத்த வைப்புத் தொகை

$$-\ \frac{\text{2015 இல் மொத்த வைப்புத் தொகை)}}{\text{2015 இல் மொத்த வைப்புத்தொகை}}\times 100$$

இதன் ஒவ்வொரு 10 % அதிகரிப்புக்கும் 0.25 புள்ளி வீதம் கூடியது 01 புள்ளி

கணக்குகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு = (2016 இல் மொத்த வைப்புக்களின் எண்ணிக்கை

$$-\ \frac{\text{2015 இல் மொத்த வைப்புக்களின் எண்ணிக்கை)}}{\text{2015 இல் மொத்த வைப்புகளின் எண்ணிக்கை}}\text{x}100$$

காலத்துக்குள்ளான கணக்குகளின் எண்ணிக்கை ஒவ்வொரு 3.5 % அதிகரிப்பிற்கும் 0.25 புள்ளி வீதம் கூடியது 1 புள்ளி

**IV. பங்கு மூலதனம் - மொத்தப் புள்ளிகள் - 05**

இதுவரை சேகரித்துள்ள பங்கு மூலதனத்தின் ஒவ்வொரு 03 மில்லியன் ரூபாவுக்கும் 0.25 புள்ளி விதம் கூடியது 03 புள்ளிகள்

$$\frac{\text{மொத்த பங்கு மூலதனம்}}{\text{03 மில்லியன் ரூபா}}$$

காலத்தினுள்ளான வைப்புத் தொகை அதிகரிப்பு

$$= \frac{(\text{2016 இன் மொத்தவைப்பு - 2015 இன் மொத்தவைப்பு})}{\text{2015 இன் மொத்த வைப்பு}} \times 100$$

இதன் ஒவ்வொரு 10% அதிகரிப்புக்கும் 0.25 புள்ளிவீதம் கூடியது 01 புள்ளி

கணக்குகளின் எண்ணிக்கையில் ஏற்படும் அதிகரிப்பு =

$$\frac{\text{2016 இல் மொத்த கணக்குகளின் எண்ணிக்கை} - \text{2015 இல் மொத்த கணக்குகளின் எண்ணிக்கை}}{\text{2015 இல் மொத்த கணக்குகளின் எண்ணிக்கை}}$$

காலத்துக்குள்ளான கணக்குகளின் எண்ணிக்கையில் ஏற்படுகின்ற ஓவ்வொரு 3.5% அதிகரிப்புக்கும் 0.25 புள்ளி வீதம் கூடியது 01 புள்ளி

**கடன் நடவடிக்கைகளுக்கு - 20 புள்ளிகள்**

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளின் பிரதான எதிர்பார்ப்பு குறைந்த வருமானம் பெறும் முயற்சியாண்மையுள்ள மக்களுக்கு மூலதன சக்தியை வழங்குவதாகும். கடன்களே வங்கியின் இலாபம் உழைக்கும் பிரதான சொத்தாகும். காலம் கடந்த கடன்கள் அறவிட முடியாக் கடன்கள் இல்லாத கடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது வங்கியின் பிரதான பொறுப்பாக அமைவதுடன் இவ்விடயம் பின்வரும் அளவீடுகள் மூலம் மதிப்பீடு செய்ய எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

**I. வெளியில் உள்ள கடன்கள் - 10 புள்ளிகள்**

வெளியில் உள்ள அறவிடவேண்டிய கடன்தொகையின் ஒவ்வொரு 16 மில்லியன் ரூபாவுக்கும் 01 புள்ளி வீதம் கூடியது 10 புள்ளிகள்

$$\frac{\text{வெளியில் உள்ள மொத்தக் கடன் தொகை}}{\text{16 மில்லியன் ரூபா}}$$

**II. கடன் பணத் தொகையின் அதிகரிப்பு – 03 புள்ளிகள்**

கடன் தொகையின் அதிகரிப்பு =

$$\frac{\text{2016 இல் வெளியில் உள்ள மொத்த கடன் தொகை - 2015 வெளியில் உள்ள மொத்த கடன் தொகை}}{\text{2015 இல் வெளியில் உள்ள மொத்த கடன் தொகை}}$$

ஒவ்வொரு 10 % அதிகரிப்பும் 01 புள்ளி வீதம் கூடியது 03 புள்ளிகள்

**III. கடன் எண்ணிக்கைகளின் அதிகரிப்பு – 02 புள்ளிகள்**

விடுவிக்கப்பட்ட கடன் எண்ணிக்கைகளின் அதிகரிப்பு =

$$\frac{\text{2016 இல் மொத்த கடன்களின் எண்ணிக்கை} - \text{2015இல் மொத்த கடன்களின் எண்ணிக்கை}}{\text{2015 இல் மொத்த கடன்களின் எண்ணிக்கை}} \times 100$$

ஓவ்வொரு 3.5 % அதிகரிப்புக்கும் 0.5 புள்ளி வீதம் கூடியது 02 புள்ளிகள்.

**IV. கடனாளிகளின் வீதம் - 02 புள்ளிகள்**

வங்கியின் அதிகாரப் பிரதேசத்தினுள் கடன் பெருக்கத்தின் பரம்பலை கருத்திற் கொள்ளல் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் நோக்கம் குறைந்த வருமானம் பெறுவோருக்கான மூலதன வழங்கலின் ஊடாக வாழ்வாதார விருத்திக்கு பங்களிப்புச் செய்தலாகும்.

கடனாளிகளின் வீதம் = $$\frac{\text{வெளியில் உள்ள கடன்களின் எண்ணிக்கை}}{\text{பங்காளர்களின் எண்ணிக்கை}} \times 100$$

மேற்படி வாய்ப்பாட்டின் பிரகாரம் 20 % க்கு 0.5 புள்ளிவீதம் கூடியது 02 புள்ளிகள்

**V. வைப்புகளுக்கான கடன் வீதம் - 03 புள்ளிகள்**

சுற்று நிருப ஆலோசணைகளின் பிரகாரம் வைப்புகளுக்கான கடன் வீதம் 80% மாகும்

வைப்புக்களுக்கான கடன் வீதம் = $$\frac{\text{வெளியில் உள்ள கடன் தொகையின் பெறுமதி}}{\text{மொத்த வைப்புக்களின் பெறுமதி}} \times 100$$

(மொத்த வைப்புக்கள் = பங்கு+ அங்கத்தவர்+ அங்கத்தவர் அல்லாதோர் + சிறுவர் + திரியமாதா + குழு + சிசுரக்க)

வெளியில் உள்ள கடன் = நுகர்வு, வாழ்வாதார சுழற்சிக் கடன் தவிர்ந்த ஏனைய கடன்களின் மீதி

வைப்புக்களின் கடன் வீதம் 80 $\geq$ 100 இடைப்பட்டிருப்பின் 03 புள்ளிகள். அவ்வாறு இல்லாதுவிடின் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது – 0 புள்ளிகள்

**இலாபத்தன்மை – 15 புள்ளிகள்**

ஒரு நிறுவனம் இலாபம் அடைய வேண்டுமாயின் செயற்பாட்டு வருமானம் செயற்பாட்டுச் செலவினங்களைவிட கூடியதாக இருக்க வேண்டும்.

**I. காலத்தினுள் உழைத்த இலாபம் (2016.12.31 இல்)**

$$\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஒரு மில்லியன் ரூபா}}$$

வருட இலாபத்தின் ஒவ்வொரு மில்லியன் ரூபாவுக்கும் 1 புள்ளி வீதம் கூடியது 07 புள்ளிகள்

**II.வருமானத்தினுள் கடன் வட்டி வருமானம் =** $\frac{\text{கடன் வட்டி வருமானம்}}{\text{மொத்த வருமானம்}} \times 100$

கடன் வட்டி வருமானத்தின் ஒவ்வொரு 10% க்கும் 01 புள்ளிகள் வீதம் கூடியது 07 புள்ளிகள்

**III. சொத்துக்கான இலாபம் பெறுவனவு வீதம் (AROA)**

$$\frac{\text{தேறிய இலாபம்}}{\text{சராசரி மொத்தச் சொத்து}} \times 100$$

$$\text{சராசரி மொத்தச் சொத்து} = \frac{(\text{ஆரம்ப மொத்த சொத்து} + \text{இறுதி மொத்த சொத்து})}{2}$$

சொத்துக்கான இலாப பெறுவனவு வீதம் 1% மாயின் 0.5 புள்ளியும், 1% தை விட அதிகமாயின் 01 புள்ளியுமாகும். கூடியது 01 புள்ளி

**இடர் முகாமைத்துவம் (Risk Management) - 20 புள்ளிகள்**

நிதிரீதியான தன்னிறைவுத் தன்மையினை உருவாக்கிக் கொள்வதற்கு வங்கியினுள் ஒவ்வொரு விடயத்துக்குமான இடர்களை முகாமை செய்ய வேண்டியது மிக அவசியமாகவுள்ளது.

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியொன்று முகம் கொடுக்கவுள்ள பிரதான இடர்கள் 03யும் முகாமை செய்வதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1. கடன் இடர் -
2. திரவத்தன்மை இடர் -
3. செயற்பாட்டு இடர் -

**கடன் இடர்களை முகாமை செய்தல் - 07 புள்ளிகள்**

வங்கியின் பிரதான சொத்தாகவுள்ள கடன்களின் இடர்களை (ஆபத்துக்களை) குறைத்துக் கொள்வதே இதன் நோக்கமாகும்

**I. காலம் கடந்த கடன் வீதம் :- 02 புள்ளிகள்**

வெளியில் உள்ள அறவிடவேண்டிய கடன்களுக்கு காணப்படும் இடர்களை (ஆபத்துக்களை) கருத்திற் கொள்ள வேண்டும். இம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவது இடர்பாடுகள் கொண்ட கடன் தொகுதியின் வீதமாகும். (PAR – portfolio At Risk) இதனை கணிப்பிடும் பொருட்டு மொத்த அறவிடவேண்டிய கடன் தொகையில் காலம் கடந்த கடன் தொகையின் மீதி கருத்திற் கொள்ளப்படுகின்றது.

**காலம் கடந்த கடன்கள் (09 மாதங்களை விட குறைவான காலம் கடந்த கடன் தொகை) – 02 புள்ளிகள்)**

காலம் கடந்த கடன் வீதம் $\leq 1\%$ எனின் 02 புள்ளிகள்
காலம் கடந்த கடன் வீதம் $\leq 2\%$ எனின் - 01 புள்ளி
காலம் கடந்த கடன் வீதம் $\leq 3\%$ எனின் - 0.5 புள்ளி
காலம் கடந்த கடன் வீதம 3.1 $\leq 10\%$ எனின் 0 புள்ளி

காலம் கடந்த கடன் வீதம் 10% விட அதிகரிப்பின் ஒவ்வொரு 10% க்கும் (-1) புள்ளி வீதம் கூடியது (-5) புள்ளிகள் வழங்கப்படும்.

$$\text{காலம் கடந்த கடன் வீதம்} = \frac{\text{காலம் கடந்த மொத்த கடன் தொகையின் பெறுமதி}}{\text{மொத்த வெளியில் உள்ள கடன்தொகை}} \times 100$$

காலங்கடந்த கடன்கள் இல்லாத வங்கிகளுக்கு முழுமையான 02 புள்ளிகளும் வழங்கப்படும்.

**II அறவிடமுடியாக் கடன் வீதம் - 02 புள்ளிகள்**

09 மாதங்களை தாண்டிய செலுத்தாமல் உள்ள கடன்கள் இங்கு கருத்திற் கொள்ளப்படும்.

அறவிடமுடியாக் கடன்வீதம் $\leq$ 0.5% எனின் 02 புள்ளிகள்

அறவிடமுடியாக் கடன்வீதம் $\leq$ 1% எனின் 01 புள்ளி

அறவிடமுடியாக் கடன்வீதம் $\leq$ 1.5% எனின் 0.5 புள்ளி

அறவிடமுடியாக் கடன்வீதம் 1.6 $\leq$ 3 எனின் 00 புள்ளி

அறவிடமுடியாக் கடன்வீதம் 3% க்கு அதிகம் எனின் ஒவ்வொரு வீதத்துக்கும் (-1) புள்ளி வீதம் கூடியது (- 5) புள்ளி வழங்கப்படும்

$$\text{அறவிட முடியாக் கடன் வீதம்} = \frac{\text{மொத்த அறவிட முடியாக் கடன் தொகை}}{\text{மொத்த வெளியில் உள்ள கடன் தொகை}} \times 100$$

**அறவிட முடியாக் கடன் மீள் அறவீடு – 03 புள்ளிகள்**

மொத்த அறவிட முடியாக் கடன் தொகையில் இருந்தும் மீள்அறவீடு செய்யப்படும் ஒவ்வொரு 10 % க்கும் 0.5 புள்ளி வீதம் கூடியது 03 புள்ளிகள் வழங்கப்படும்.

$$\frac{\text{2016 இல் அறவிட்ட அறவிட முடியாக் கடன்தொகை}}{\text{(2016 இல் அறவிட்ட அறவிட முடியாக் கடன் பெறுமதி + 2016.12.31 இல் உள்ள அறவிட முடியாக் கடன் மீதி)}}$$

அறவிட முடியாக் கடன் வீதம் 0 ஆக உள்ள வங்கிகளுக்கு இதன் கூடிய புள்ளிகள் 03 ஆம் உரித்தாகும்.

**வங்கியுடன் தொடர்புபட்ட குழுவினருக்கு கடன் வழங்குவதை கட்டுப்படுத்தல்**

மதிப்பீட்டுக்கு உட்படும் காலத்தினுள் அடையாளம் காணப்பட்டுள்ள ஊழியர் மோசடியிலான அறவிட முடியாக் கடன் கணக்கின் மீதி ரூபா 50000/= க்கு (-01) புள்ளி வழங்கப்படும். இம் மீதி அதிகரிக்கும் ஒவ்வொரு 50000/= ரூபாவுக்கும் (-01) புள்ளி வீதம் சேர்க்கப்படும்.

**அறவிட முடியாக் கடன்களுக்கான ஒதுக்கம் செய்தல்.**

ஏதாவது ஒரு வங்கியில் சுற்றுநிருப ஆலோசனைகளின் பிரகாரம் 100% அறவிட முடியாக் கடனுக்கான ஒதுக்கங்கள் செய்யப்படவில்லை எனின் வங்கி பெற்றுக் கொண்ட புள்ளிகளுடன் (-05) புள்ளி சேர்க்கப்படும்.

**திரவத்தன்மை இடர்களை முகாமை செய்தல்**

**திரவத்தன்மை வீதம் - 01 புள்ளி**

திரவத்தன்மை வீதம் 5% - 10% திற்கு இடையே காணப்படின் இந்த 01 புள்ளியும் வழங்கப்படும்

$$\text{திரவத்தன்மை வீதம்} = \frac{\text{சேமிப்பு வைப்பு} + \text{கையிருப்பு காசு} + \text{நடைமுறைக் கணக்கு மீதிகள்}}{\text{மொத்த வைப்புகள்}} \times 100$$

சுற்றுநிருப ஆலோசனைகளின் பிரகாரம் இவ் விகிதாசாரம் 10% மாக இருக்க வேண்டியதுடன் இதனை விட அதிகரிக்கின்ற ஒவ்வொரு 1% க்கும் (-1) புள்ளிவீதம் சேர்க்கப்படும். விசேடமாக இவ் விடயத்தில் நிதியங்களின் முகாமைத்துவம் தொடர்பிலான இயலுமைகள் கவனத்தில் கொள்ளப்படும். (Fund Management)

**<u>செயற்பாட்டு இடர்களை முகாமை செய்தல் - 12 புள்ளிகள்</u>**

வங்கியின் செய்ற்பாட்டு நடைமுறைகளின் இடர்களை முகாமை செய்கின்ற விதம் இங்கு கவனத்தில் கொள்ளப்படும். அதாவது செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது சுற்றுநிருபங்கள் மற்றும் நெறிப்படுத்தல் ஆலோசணைகள் தொடர்பில் வங்கி வெளிக்காட்டுகின்ற இணக்கப்பாடுகள் (Compliance) உட்பட வங்கியின் ஒட்டு மொத்த செயற்பாட்டு இடர்களையும் முகாமை செய்கின்ற விதம் இங்கு மதிப்பிடப்படவுள்ளது. இது கீழ் குறிப்பிடப்படும் விடயங்களின் அடிப்படையில் கவனத்தில் கொள்ளப்படவுள்ளது.

**நன்மதிப்பு – 05 புள்ளிகள்**

பின்வரும் விடங்களின் பிரகாரம் வங்கியின் செயற்பாட்டு இடர்கள் முகாமை செய்யப்படுகின்ற விதம் கவனத்தில் கொள்ளப்படும்.

- குறித்த மதிப்பீட்டுக் காலத்தினுள் ஏதாவது நிதி மோசடிகளுக்கு வங்கி முகம் கொடுக்கவில்லை எனின் 01 புள்ளியும் முகம் கொடுத்து அது பரிசீலனையின் போது நிருபிக்கப்பட்டிருப்பின் (-01) புள்ளியும்.
- மதிப்பீட்டுக் காலத்தினுள் வங்கி குறித்த தினத்தில் நலனுதவித் தொகையினை உரிய பயனுகரிகளின் கணக்குகளுக்கு வரவுவைக்கவில்லையாயின் அவ் வங்கிக்கு (-0.5) புள்ளி மொத்தப்புள்ளியுடன் சேர்க்கப்படும்.
- மாவட்டக் கண்காணிப்பு அலகின் தகவல்களின் பிரகாரம் எழுத்து மூலமான அல்லது தொலைபேசி மூலமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று அது நிரூபிக்கப்பட்டிருப்பின் (-1) புள்ளி சேர்க்கப்படும். அவ்வாறு இல்லையாயின் 0 புள்ளி
- வருடத்தினுள் வங்கியின் நன்மதிப்பை உயர்த்தும் வண்ணம் சமூகப்பணிகள் / ஆக்கத்திறனுள்ள பணிகள் - 01 புள்ளி ( விடயங்களை உறுதிப்படுத்தி பெற்றுக் கொள்ளக் கூடிய புள்ளி 01)
- கணக்காய்வு அறிக்கைகளுக்கு – 03 புள்ளிகள் (மதிப்பீடு செய்யப்படும் வருடத்திற்கு முன்னரான 3 வருடங்களின் (2010.2011.2012) கணக்காய்வு அறிக்கைகளின் பொருட்டு உண்மையானதும், ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான அபிப்பிராயம் வழங்கப்பட்டிருப்பின் கூடியது 03 புள்ளிகள் உரித்தாகும். அவ்வாறு இல்லாத கணக்காய்வு அறிக்கைகளுக்கு (-01) புள்ளிவீதம் சேர்க்கப்படும் (வங்கியுடன் தொடர்புபட்ட விடயங்கள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படும்)

2. <u>கோவைகள் செயற்படுத்தல் - 04 புள்ளிகள்</u>

- கோவைகள் (சுற்று நிருபக் கோவை, முன்னேற்ற அறிக்கைக் கோவை…)
  சரியான முறையில் நிகழ்காலம் வரை சீர் செய்து (Update பண்ணி) செயற்படுத்தி இருப்பின் - 02 புள்ளிகள்

**பின்வரும் விடயங்களை பூரணப்படுத்தி இருப்பின் முழுமையான புள்ளிகள் வழங்கப்படும்.**

நிகழ்காலம் வரை சீர் செய்யப்பட்ட விடயக் கோவைகள், பதிவேடுகள் பேணல். (உள்வரும் வெளிச் செல்லும் தரவுப் பதிவேடு, வரவுப் பதிவேடு, லீவுப் பதிவேடு, குறுகிய லீவுப் பதிவேடு, லொக் புத்தகம் உட்பட சகல உள்ளக நிருவாக ஆவணங்கள், நிகழ்காலம் வரை புதுப்பிக்கப்பட்ட லெஜர்கள் பேணல்)

கோவை மற்றும் ஆவணங்களின் அட்டையில் தெளிவான முறையில் பெயர் மற்றும் இலக்கம் குறிப்பிடப்பட்டிருத்தல்.

கோவைகளின் கடிதங்களுக்கு இலக்கமிடுவதுடன் கோவைகளை உரிய முறைப்படி நடாத்திச் செல்லல்.

மேற்பார்வை உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கபடும் கடிதங்களுக்கு உரிய முறையிலான கோவைக் குறிப்புகள் எழுதுதல்.

**ஓவ்வொரு விடயத்தின் பூரணத்தன்மைக்கும் 0.5 புள்ளிவீதம் கூடியது 02 புள்ளிகள்.**

- வங்கியின் அனைத்து மாதாந்த பரீட்சை மீதிகளும் சமப்பட்டிருப்பின் - 01 புள்ளி

  50% அல்லது அதைவிடக் கூடியளவில் பரீட்சை மீதிகள் சமப்படவில்லை எனின் (-1) புள்ளி வழங்கப்படும். அவ்வாறு இல்லையாயின் 0 புள்ளி வழங்கப்படும்.
  பொதுப்பேரேடு சீர்செய்யப்பட்ட விதத்தில் செயற்படுத்திச் செல்லின் கூடியது – 01 புள்ளி. இல்லையாயின் (-1) புள்ளி வழங்கப்படும்.

  பரீட்சை மீதிகளை சமப்படுத்துவதற்கான தொங்கல் கணக்கு மீதிகள் சீர் செய்யப்படாது இருப்பின் (-0.5) புள்ளி வழங்கப்படும். இல்லாதுவிடின் புள்ளிகள் இல்லை.

**தகவல்களை முகாமை செய்தல் - 03 புள்ளிகள்**

**I.** நிகழ்காலம் வரை புதுப்பிக்கப்பட்ட (Update செய்யப்பட்ட) தகவல்கள் வலையமைப்பு இருப்பின் - 01 புள்ளி (பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்)

உரிய தினத்துக்கு முன்னர் சரியான முறையில் அனைத்து அறிக்கைகளையும் உரிய சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்துக்கு அனுப்புதல், அடிப்படைத் தகவல்கள் காட்சிப்படுத்தல், முன்னேற்ற அறிக்கைக் கோவை செயற்படுத்திச் செல்லல்.

**II.** செயற்பாட்டுத் திட்டமிடலுக்கு (Action Plan) அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளல் - 01 புள்ளி (செயற்பாட்டு திட்டமிடலுடன் கூடிய கோவை செயற்படுத்திச் செல்லல் மற்றும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்)

**III.** முறையான பின்னூட்டல் நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு முறைகளை நடாத்திச் செல்லல். புள்ளி – 01 (கூட்ட அறிக்கைகள் மற்றும் பங்குபற்றியோரின் பட்டியல் என்பன கவனத்தில் கொள்ளப்படும்) – புள்ளி - 01

**வங்கிச் சுற்றாடல் - 15 புள்ளிகள்**

(மதிப்பிடு / தரப்படுத்தல் முறையின் கீழ் இவ் விடயத்துக்கு வழங்கப்படும் புள்ளிகள் - 15 ஆகும்)

| | | |
|---|---|---|
| **I.** | சுற்றுநிருப ஆலோசணைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள பெயர்ப்பலகை | - 02 புள்ளிகள் |
| **II.** | பாதுகாப்பு நடவடிக்கைகள் (மதில், வேலி, நிரந்தர பாதுகாப்பு கொண்ட கட்டிடம்) | - 02 புள்ளிகள் |
| **III.** | உள்ளக ஒழுங்கமைப்பு முறைமை (5-S எண்ணக்கரு) | - 03 புள்ளிகள் |
| **IV.** | தேவையான பௌதிக வளங்களை பெற்றுக்கொள்ளல் | - 02 புள்ளிகள் |
| **V.** | கவர்ச்சிகரமான வங்கிச் சுற்றாடல் (உள்ளக, வெளியாக சுற்றுவட்டாரம்) | - 05 புள்ளிகள் |
| **VI.** | வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகத் தலைவர்களுக்கு தேவையான வசதிகள் | - 01 புள்ளி |

(1) **விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்தல் :-**

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவத்திற்கு அமைவான தகவல்கள் உரியவங்கி முகாமையாளரால் வழங்கப்படல் வேண்டும். இணைப்பு இலக்கம் 1இன் மூலம் உரிய படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உரிய வங்கியின் தகவல்கள் உட்படுத்தப்படும் போது அவ் வங்கிக்குரிய சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர் மூலம் அது கண்காணிக்கப்படல் வேண்டும்.

உரிய தகவல்களை உட்படுத்தும் போது மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் அனுப்பும் வங்கி ஒழுங்கு முறைக்கு அமைய வங்கிகளின் பெயர்களை உட்படுத்தி இன்நடவடிக்கைகளுக்கும் பகுப்பாய்வுக்கும் ஒத்துழைப்பு வழங்கவும். சரியான முறையில் தகவல்களை வழங்காத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். படிவங்களை பூர்த்தி செய்யும் போது கீழ் வரும் படிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

**I.** இச் சுற்று நிருபம் உட்பட இணைப்பு 01 படிவத்தையும் பெற்றுக் கொள்ளல்

**II.** மகா சங்கத்தின் கீழ் இயங்கும் வங்கிகளின் எண்ணிக்கைக்கு அமைய ஒரு வங்கிக்கு ஒரு வினாக்கொத்து என்ற வகையில் தேவையான அளவு வினாக்கொத்து படிவங்களை சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர் தயார் செய்தல்.

**III.** தீர்மானிக்கின்ற தினத்தில் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளரின் கன்காணிப்பின் கீழ் உரிய வங்கி முகாமையாளர் மூலம் தமது வங்கிக்குரிய படிவத்தினை பூரணப்படுத்தி பெற்றுக் கொள்ளல் வேண்டும். (நியதி 1.2,3 (I) , 3(II) , 4)

**IV.** நியதி இலக்கம் 3 (III) மற்றும் 5 போன்றவற்றுக்கு குழுவினால் புள்ளிகள் வழங்கப்படும்.

**V.** சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர் தமது வங்கிச் சங்கத்தின் கீழ் இயங்கும் அனைத்து வங்கிகளினதும் தகவல் படிவங்கள் பூர்த்தி செய்த பின்னர் அப்படிவங்களை வங்கி மட்டத்தில் தனித்தனி கோவையில் இட்டு உரிய முறைப்படி வாழ்வின் எழுச்சி மாவட்ட பணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

**VI.** மாவட்ட பணிப்பாளர்கள் தமது மாவட்டத்தின் ஒவ்வொரு வங்கியினாலும் பூரணப்படுத்தப்பட்ட படிவத்தில் உள்ள தகவல்களை மாவட்டத்திற்கான படிவத்தில் உட்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (தகவல் முகாமைத்துவ அலகின் **misbank2015@yahoo.com** எனும் முகவரியில் **samu123123** என்ற குறியீட்டு இலக்கத்தை பாவித்து இப் படிவத்தை பெற்றுக் கொள்ள முடியும்.)

### 3.1 வெளிஅவதானிப்புகளுக்கு அமைய புள்ளி வழங்கல்

உரிய படிவத்தில் தகவல்களை உட்படுத்தும் போது நியதி இலக்கம் 3 (III), மற்றும் 5 என்பவற்றுக்கான புள்ளிகள் பட்டியல்படுத்தப்பட்ட தகவல்களுக்கு மேலதிகமாக வேறு அவதானிப்புக்களையும் மேற்கொண்டு புள்ளிகளை வழங்க வேண்டி ஏற்படும். நியமிக்கப்படும் சுயாதீனக் குழுவின் மூலம் அம்மதிப்பீட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். அக் குழுவிற்கு கீழ் குறிப்பிடப்படுபவர்கள் அங்கத்தவர்களாக இருப்பர். இக்குழு இந் நடவடிக்கைகளின் பொருட்டு தமது பிரிவுகளுக்கு வருகைதரும் போது உரிய பிரதேச செயலகப் பிரிவின் சமுதாய அடிப்படை வங்கிச்சங்க முகாமையாளர் தனது ஒத்துழைப்பினை வழங்குதல் வேண்டும்.

### 3.2 குழு அமைப்பு :-

குறிப்பிடப்படும் சகல மட்டங்களையும் உள்ளடக்கிய விதத்தில் குழு அமைக்கப்படும். இதில் உயர்ந்தபட்சம் **06** பேர் அங்கத்தவர்களாக இருப்பர். இக் குழுவுக்கு தலைமைக் காரியாலயத்திற்கான உத்தியோகத்தர்கள் குறுநிதிப் பணிப்பாளரினாலும், மாவட்ட மட்ட உத்தியோகத்தர்கள் மாவட்ட பணிப்பாளரினாலும், பிரதேச மட்ட உத்தியோகத்தர்கள் பிரதேச செயலாளரினாலும் நியமிக்கப்படுவர். இவ்வாறு குழுவுக்கு நியமிக்கப்படும் அனைவரினது பெயர்களையும் வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின்

பணிப்பாளர் நாயகத்துக்கு முன்வைத்து அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (இணைப்பு – 02) அதன் பிரகாரம் அவர்களுக்கான கடமைக் கூறுகள் பொறுப்பாக்கப்படும்.

- பிரதான காரியாலயத்தின் குறுநிதிப்பிரிவின் உத்தியோகத்தர்கள் - 02
- மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கபட்ட உத்தியோகத்தர் ஒருவர்.
- மாவட்ட கண்கானிப்பு உத்தியோகத்தர் ஒருவர்.
- மாவட்டத்தின் வங்கி விடய பொறுப்பு முகாமையாளர்.
- சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர் அல்லது தலைமையக அல்லது கருத்திட்ட முகாமையாளர்

அந்தந்த மட்டங்களுக்கான உத்தியோகத்தர்களை கொண்டு குழுக்களை அமைக்கும் பணிகள் மாவட்ட செயலாளரின் ஆலோசணைகளின் பிரகாரம் மாவட்ட பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை மாவட்ட மதிப்பீட்டு குழு உரிய மாவட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

### 3.3 தகவல்கள் உண்மையென உறுதிப்படுத்தல் :

மாவட்டத்தின் ஒவ்வொரு வங்கியினதும் தகவல்கள் உரிய படிவத்தில் உள்வாங்கப்பட்டதன் பின்னர் சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளரினால் அத் தகவல்களின் உண்மைத் தன்மை பரீட்சிக்கப்பட்டு உரிய படிவங்கள் வங்கி மட்டத்தில் தனித்தனியாக கோவை செய்து மாவட்ட பணிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டம். மாவட்டத்துக்குரிய விண்ணப்பப்படிவங்கள் வங்கிச் சங்கங்களில் இருந்து கிடைத்த பின்னர் மாவட்ட வங்கி விடயப் பொறுப்பு முகாமையாளரினால் மாவட்ட தகவல் படிவத்தில் அவை உட்படுத்தப்படல் வேண்டும். (மாவட்டத்துக்கான தகவல் படிவம் குறுநிதிப் பிரிவின் **MIS** அலகின் **misbank2015@yahoo.com** எனும் முகவரியில் **samu123123** எனும் இரகசிய இலக்கத்தினை பாவித்து பெற்றுக் கொள்ள முடியும். மாவட்ட கண்கானிப்பு உத்தியோகத்தரினால் பரிசீலனை செய்யப்படடு தகவல்கள் உண்மையானது என உறுதிப்படுத்துதல் வேண்டும். உத்தியோகத்தர்கள் உரிய தகவல்களின் உண்மைத் தன்மை தொடர்பாக சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதுமான விதத்தில் மதிப்பீடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

மேலும் மாவட்ட செயலாளரின் தலைமையில் மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளரின் பூரண கண்கானிப்பின் கீழ் குழுவின் ஊடாக பிரதேச மட்ட மற்றும் மாவட்ட மட்டத்தின் பெறுபேற்று பட்டியல் தயாரிக்கபடல் வேண்டும். குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும். அதன் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட வங்கி மதிப்பீட்டு மற்றும் தரப்படுத்தல் பெறுபேற்று அட்டவணை தெளிவான முறையில் வெளியிடப்படும்.

இம் மதிப்பீட்டின் பின்னர் தேசிய மட்ட மதிப்பீட்டின் பொருட்டு பெறுபேற்று அட்டவணையுடன் சகல மதிப்பீட்டு படிவங்களையும் பிரதான காரியாலயத்தின் குறுநிதிப்பிரிவுக்கு (தகவல் முகாமைத்துவ அலகிற்கு) மாவட்ட மட்டத்திலான கோவை கையளிக்கப்படல் வேண்டும். உரிய தகவல்கள்Pen Drive ஊடாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

### 4.0 புள்ளிகளின் அடிப்படையில் வங்கியினை தரப்படுத்தலும் மதிப்பீடு செய்தலும்

இத்தரப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் வங்கிகள் 4 பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்படவுள்ளன. அது கீழ்வருமாறு அமையும்.

**4.1 புள்ளிவழங்கல் திட்டத்தின் கீழ் வங்கிகளை தரப்படுத்தல்**

- மொத்த புள்ளிகள் 75 அல்லது அதனை விட கூடியது - சிறப்பானது - **A**
- மொத்தப் புள்ளிகள் 65 ≥ 75 – திருப்திகரமானது - **B**
- மொத்தப் புள்ளிகள் 50 ≥ 65 சாதாரணமாணது - **C**
- மொத்தப் புள்ளிகள் 50 க்கு குறைவு – விசேட அவதானம் செலுத்த வேண்டியவை - **D**

ஓட்டு மொத்த வங்கி வலையமைப்பும் மேற்குறித்த விதத்தில் புள்ளிகளைப் பெறும் போது அதற்கான தரத்தில் உள்வாங்கப்படும். எதிர்காலத்தில் ஒவ்வொரு வருடமும் கருத்தில் கொள்ளப்படும் நியதிகளுக்கு அமைய வங்கிகள் தரப்படுத்தப்படவுள்ளன (காலத்திற்கு ஏற்றவிதத்தில் நியதிகள் மாற்றம் செய்யப்படலாம்) இங்கு கருத்தில் கொள்ளப்படும் காலத்தினுள் உரிய நியதிகளுக்கு அமைவாக பெற்றுக் கொள்கின்ற புள்ளிகளுக்கு அமைய வங்கிகள் அடுத்தகட்ட தரத்துக்கு உயர்த்தப்படும். எனவே தொடர்ச்சியாக உயர்தரத்தை பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற விதத்தில் முகாமையாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**5.0 வங்கிகளை மதிப்பீடு செய்தல் (பாராட்டுதல்)**

வங்கிகள் தரப்படுத்தலுடன் இணைந்த விதத்தில் பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலான பாராட்டுச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

**5.1 பிரதேச மட்டம் :-**

மேற்படி நியதிகளுக்கு அமைய பிரதேச செயலக மட்டத்தில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற 03 வங்கிகள் வரிசைப்படி தெரிவு செய்யப்பட்டு பாராட்டப்படவுள்ளது. இதற்கு குறைந்த மட்டப் புள்ளியாக 50 அல்லது அதனைவிட கூடுதலான புள்ளிகள் பெறல் வேண்டும்.

**5.2 மாவட்ட மட்டம் :-**

மேற்படி நியதிகளுக்கு அமைவாக மாவட்ட மட்டத்தில் அதிகபட்ச புள்ளிகளைப் பெற்ற 03 வங்கிகளை வரிசைப்படி தெரிவு செய்து அவை பாராட்டப்படவுள்ளன. ஒப்பீட்டுரீதியாக வங்கிகளின் எண்ணிக்கை அதிகமாவுள்ள மாவட்டங்களில் இருந்து பாராட்டுதலுக்கு உட்படுத்தப்படும் வங்கிகளை தெரிவு செய்யும் போது அது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். எனவே அவ்வாறான மாவட்டங்களில் சற்று கூடதலான வங்கிகள் (கீழ் குறிப்பிட்டுள்ளவாறு) பாராட்டுதலுக்கு தெரிவு செய்யப்படல் வேண்டும். இங்கு குறைந்தது 65 புள்ளிகளை அல்ல அதற்கு அதிகமான புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| வங்கி 1 | – 60 வரையுள்ள மாவட்டங்கள் | - 3 (இடங்கள்) (1,2,3) |
| வங்கிகள் 61 | – 90 வரையுள்ள மாவட்டங்கள் | - (5 இடங்கள்) (1,2,3.4,5,) |
| வங்கிகள் 91 | – 120 வரையுள்ள் மாவட்டங்கள் | - 7 (இடங்கள் (1,2.,3,4,5,6,7) |

**5.3 தேசிய மட்டம் :-**

இன் நியதிகளுக்கு அமைவாக தேசிய மட்டத்தில் அதிகபட்ச புள்ளிகளைப் பெறுகின்ற 03 வங்கிகள் தெரிவு செய்யப்படவுள்ளன. அதற்கு குறைந்தபட்சம் 75 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும். 75 புள்ளிகளுக்கு மேல் பெறும் ஏனைய அனைத்து வங்கிகளுக்கும் வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.

வங்கிகளின் தரப்படுத்தல் செயற்பாட்டினுள் A,B,C தரங்களுக்கு தெரிவு செய்யப்படும் வங்கிகளையும் மதிப்பீட்டுச் செயற்பாட்டின் கீழ் உயர்வான தரத்தினை பெறுகின்ற வங்கிகளையும் மற்றும் அவ்வங்கிகளின் சகல உத்தியோகத்தர்களையும் பாராட்டும் விதத்தில் அவர்களுக்கு நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் என்பன வழங்கப்படவுள்ளது.

**06. பணிக் குழுவினரை பாராட்டுதல்**

**06.1 மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலான வெற்றிக் கிண்ணங்கள் வழங்கல்**

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வங்கி, அதற்குரிய சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் என்பன பாராட்டப்படுவதுடன் அவற்றின் சகல பணிக் குழுவினரும் பாராட்டுக்கு உட்படுத்தப்படுவர். அதனோடு இணைந்த விதத்தில் மக்கள் கட்டமைப்பான கட்டுப்பாட்டு சபை, சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் நிறைவேற்று சபை என்பனவும் பாராட்டுதலுக்கு உட்படுத்தப்படும். அவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படும்.

தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வங்கியின் அனைத்து பணிக்குழுவினரும், அவ் வங்கிக்குரிய சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் பணிக்குழுவினருக்கும், உரிய பிரதேச செயலாளர், பணிப்பாளர் மற்றும் வங்கி விடயத்துக்கு பொறுப்பான அனைத்து உத்தியோகத்தர்களும் பாராட்டதலுக்கு உட்படுவர். (வங்கி விடய பொறுப்பு, கண்கானிப்பு மற்றும் கணக்காய்வு)

இங்கு உன்னதமான சேவைகளை வழங்கிய உத்தியோகத்தர்களுக்கு விசேட ஊக்குவிப்புகள் வழங்கப்படவுள்ளது.

**07. விசேட வேலைத் திட்டங்களுக்கு கூடிய பங்களிப்பு செய்தமை :-**

**7.1 கூடுதலான வைப்புக்களை சேகரித்தமை :-**

கடந்த ஆண்டில் பிரதேச, மாவட்ட, மற்றும் தேசிய மட்டத்தில் கூடுதலான வைப்புத் தொகையினை சேகரித்த கிராம சேவகர் பிரிவில் கடமையாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தரை பாராட்டுகின்ற முறையும் செயற்படுத்தப்படவுள்ளது. (கட்டாய சேமிப்பு தவிர்ந்த ஏனைய மொத்த வைப்புகளின் அளவு)

**7.2 கூடுதலான கடன் வழங்கல்**

கடந்த ஆண்டில் பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டதில் கூடுதலான கடன்களை வழங்கியுள்ள உத்தியோகத்தரும் பாராட்டப்படவுள்ளார். இங்கு உரிய பிரிவில் அறவிடமுடியாக் கடன் **3%** க்கு குறைவாகவும், காலம் கடந்த கடன் **10 %** விட குறைவாகவும் காணப்படல் வேண்டும்.

7.3 கடந்த ஆண்டினுள் சுற்று நிருபங்களின் மூலம் அறிமுகப்படுத்திய விசேட வேலைத் திட்டங்களில் (புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல்) கூடுதலான அளவு பங்களிப்பு வழங்கிய உத்தியோகத்தர்கள் பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் பாராட்டப்படவுள்ள்னர். அந்தந்த மாவட்டங்களில் இருந்து எமக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் இம் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**08. மதிப்பீட்டு காலம் :-**

**2015.12.31** தொடக்கம் **2016.12.31** வரையான காலமாகும் கணிப்பீடுகளை மேற்கொள்ளும் போது கடந்த கால ஒப்பீட்டு ரீதியான ஆண்டாக **2015.12.31** கவனத்தில் கொள்ளப்படும்.

**09. செயற்படுத்துகின்ற கால எல்லை**

**2016.01.01 – 2016.03.**01 வரையான காலத்தினுள் செயற்படுத்தப்படவுள்ளது (இணைப்பு– 03 இன் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது)

**10. ஒருங்கிணைப்பு மற்றும் பின்னூட்டல்களை மேற்கொள்ளல் :-**

பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின் பிரகாரம் குறுநிதிப் பணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் தகவல் முகாமைத்துவ அலகு.

**11. பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கல்**

பாராட்டுக்கு உட்படுத்தப்படுகின்ற வங்கிகள், வங்கிச் சங்கம் மற்றும் அவற்றின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவுள்ள பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பன தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும். மேலும் அமைச்சரால் தீர்மானிக்கப்படுகின்ற தினத்தில் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின் பிரகாரம் குறுநிதிப் பணிப்பாளரினால் ஒழுங்கு செய்யப்பட்டு, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் நடைபெறும் தேசிய விழாவில் பாராட்டுதல்கள் வழங்கப்படும்.

**12. பொதுவான விடயங்கள்**

1. இவ்வேலைத்திட்டம் தொடர்பாக 2015.10.15 ஆம் திகதிய **DDD/MF/MIS/05** இலக்க கடிதத்தின் மூலம் சகல வங்கி முகாமையாளர்களுக்கும் அறிவூட்டப்பட்டுள்ளது.

2. இவ் ஊக்கப்படுத்தல் செயற்பாடானது மிகச் சாதாரணமானதும் சுயாதீனமானதுமாக அமைய வேண்டியதுடன் இதற்கான கடமைகளுக்கு பொறுப்பாக்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள் அதனை உரிய முறையில் செயற்படுத்த வேண்டும்.

3. உரிய இணைப்புக்களின் மூலம் சகல வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் அதனை தெளிவாக விளங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

4. இதற்கான செலவுகளை மேற்கொள்ளல் தொடர்பாக பொதுவான ஆலோசனைகள் வழங்கப்படும்.

5. நியமிக்கப்படுகின்ற மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

ஏதிர்காலத்தில் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களுக்கும் இத் தரப்படுத்தல் வேலைத்திட்டத்தினை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் இதற்கு மேலதிகமாக ஒட்டுமொத்த வங்கி வலையமைப்பினதும் சகல பணிக் குழுவினருக்குமான உத்தியோகத்தர் செயற்றிறன் மதிப்பீட்டு வேலைத்திட்டமும் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக ஏதும் பிரச்சினைகள் இருப்பின் அல்லது விளக்கங்கள் தேவையாயின் கிழ்வரும் தொலை இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்.

தகவல் முகாமைத்துவ பிரிவின் தொலைபேசி இலக்கம்

011 – 2872227 - தகவல் முகாமைத்துவ அலகு முகாமையாளர் - எச். ருக்மா மாணல்

**நீல் பண்டார ஹப்புஹின்ன**
பணிப்பாளர் நாயகம்
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்.

**பிரதிகள் :-**

1. செயலாளர், சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - தகவலுக்காக
2. மாவட்ட செயலாளர்கள் / மேலதிக வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் நாயகம் - தகவலுக்காக
3. சகல மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர்களுக்கும் - தகவலுக்காக
4. சகல பிரதேச செயலாளர்களுக்கும் - தகவலுக்காக
5. பிரதம உள்ளக கணக்காய்வாளர், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் - தகவலுக்காக

Translated By : I. Aliyar (DC/N&E)